CONFIDENCE PROJECT

Ver. Mar.31/23

# நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்களா, கர்ப்பமடையத் திட்டமிட்டுள்ளீர்களா அல்லது உங்களுக்கு சமீபத்தில் குழந்தை பிறந்துள்ளதா?

**பாதுகாப்பு தொடர்பான நீண்ட காலத் தரவுகளை நாங்கள் எதிர்நோக்கிக் காத்திருக்கும் வேளையில், கர்ப்பமாக இருக்கும் போது அல்லது தாய்ப்பாலூட்டும்போது கோவிட்-19 தடுப்பூசியைப் போட்டுக்கொள்வது என்பது ஒரு கடினமான முடிவாக இருக்கக்கூடும்.**

**உங்களுக்குப் பொருத்தமான ஒரு தகவலளிக்கப்பட்ட முடிவை எடுப்பதற்கு இந்த விளக்கப்படம் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும் என நாங்கள் நம்புகிறோம்.**

கோவிட்-19 ஆல் பாதிக்கப்படும் தடுப்பூசி போட்டுக்கொள்ளாத கர்ப்பமடைந்துள்ள பெண்களும்/ நபர்களும், அவர்களுடைய குழந்தைகளும் கடுமையான நோய்க்கு அல்லது இறப்புக்கு உள்ளாகும் அபாயத்தில் உள்ளனர்.

கோவிட்19 தடுப்பூசியைப் போட்டுக்கொள்வது உங்களுக்கு வைரஸ் நோய்த்தொற்று ஏற்படுவதைத் தடுக்காமல் போனாலும் கூட அது கருச்சிதைவு, குழந்தை இறந்து பிறத்தல், குறைப்பிரசவம் மற்றும் உங்கள் குழந்தை தீவிர சிகிச்சைப் பிரிவில்(NICU) அனுமதிக்கப்படுதல் போன்ற நிகழ்வுகள் ஏற்படும் வாய்ப்புகளைக் குறைக்கக்கூடும். தடுப்பூசி போட்டுக்கொள்வது நிமோனியா ஏற்படுதல், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய தேவை எழுதல், சுவாசிக்க ஓர் இயந்திரம் தேவைப்படுதல் அல்லது உயிரிழப்பு ஏற்படுதல் போன்ற நிகழ்வுகள் உங்களுக்கு ஏற்படும் வாய்ப்புகளையும் குறைக்கக்கூடும்.

கர்ப்பமாக இருக்கும் போது நீங்கள் கோவிட்-19 தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதன் மூலம் நோய்வாய்ப்படுவதிலிருந்து உங்கள் குழந்தையைப் பாதுகாக்கும் எதிர் உயிரிகளை (ஆன்டிபாடீஸ்) உங்கள் உடல் உருவாக்கும்.

கர்ப்பமடைவதற்கு முன்போ, கர்ப்பமாக இருக்கும்போதோ அல்லது பிரசவத்திற்கு பிறகோ எப்போது வேண்டுமானாலும் தடுப்பூசியைப் போட்டுக்கொள்வது பாதுகாப்பானதாகும். இந்தப் பரிந்துரை கனடா நாட்டில் உள்ள 100,000-க்கும் மேற்பட்ட கர்ப்பமடைந்துள்ள நபர்களிடமிருந்தும், உலகெங்கிலும் உள்ள ஆயிரக்கணக்கான நபர்களிடமிருந்தும் பெறப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது.

கர்ப்பமடையத் திட்டமிடும்போதோ, கர்ப்பமாக இருக்கும்போதோ அல்லது தாய்ப்பாலூட்டும்போதோ தடுப்பூசி போட்டுக்கொள்வதை சுகாதார தொழில்முறைக் குழுக்கள்* உறுதியாகப் பரிந்துரை செய்கின்றன. இதனால் உங்களுக்கும், உங்கள் குழந்தைக்கும் ஏற்படக்கூடிய ஆபத்துகளை விட நன்மைகளே அதிகம்.

* Society of Obstetricians & Gynaecologists of Canada (SOGC), Public Health Agency of Canada (PHAC), College of Family Physicians of Canada (CFPC), Canadian Association of Midwives (CAM), National Advisory Committee on Immunization (NACI)

McMaster University | Obstetrics & Gynecology

health nexus santé

*Financial contribution from*
*Avec le financement de*

Public Health Agency of Canada | Agence de la santé publique du Canada

CONFIDENCE PROJECT

## கோவிட்-19 தடுப்பூசி எனக்குப் பாதுகாப்பானதா?

தடுப்பூசியால் ஏற்படும் பக்கவிளைவுகளில், தடுப்பூசி உட்செலுத்தப்பட்ட இடத்தில் வலி, வீக்கம் அல்லது சிவந்து போதல், காய்ச்சல், களைப்பு, தலைவலி, தசைவலி, வாந்தி/வயிற்றுப் போக்கு மற்றும் மூட்டு வலிகள் ஆகியவை உள்ளடங்குகின்றன. கர்ப்பமடைந்துள்ள பெண்களிலும் மற்றும் கர்ப்பமடையாத பெண்களிலும்/நபர்களிலும் இந்த அறிகுறிகள் தோன்றுவதற்கான வாய்ப்பும், அவற்றின் தீவிரத்தன்மையும் ஒரே மாதிரியாகவே இருக்கும்.

கர்ப்பமாக இருக்கும்போது தடுப்பூசி போட்டுக்கொள்வது உங்களுக்கு குறைப்பிரசவம் ஏற்படும் அபாயத்தையோ அல்லது உங்கள் குழந்தை குறைபாட்டுடன் பிறக்கும் அபாயத்தையோ அல்லது உங்கள் கர்ப்ப காலத்தில் உங்களுக்கு அல்லது உங்கள் குழந்தைக்கு ஏற்படக்கூடிய வேறு எந்த அபாயத்தையோ அதிகரிக்காது.

உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் ஒவ்வாமை எதிர்வினைகள், மயோகார்டைட்டிஸ் மற்றும் பெரிக்கார்டைட்டிஸ் (இதயத் தசையில் அல்லது இதயத்தைச் சுற்றியுள்ள உள்ளுறையில் ஏற்படும் அழற்சி), இரத்த உறைவுகள் மற்றும் தசை பலவீனம் அல்லது முடக்கு வாதம் போன்ற தீவிரமானப் பிரச்சனைகள் மிகவும் அரிதாகவே ஏற்படுகின்றன.

## தடுப்பூசி போட்டுக்கொள்வது என்னுடைய மாதவிடாய் சுழற்சிகளையோ அல்லது குழந்தையைப் பெற்றெடுக்கும் திறனையோ பாதிக்குமா?

கோவிட்-19 தடுப்பூசிகள் மாதவிடாய் காலங்களுக்கு இடையேயான நேரத்தை ஒன்று அல்லது இரண்டு நாட்கள் அதிகரிக்கக்கூடும் மற்றும் இரத்தக் கசிவு ஏற்படும் முறைகளை சிறிதளவு மாற்றக்கூடும். எனினும், தடுப்பூசி எடுத்துக்கொண்டதைத் தொடர்ந்து இந்த மாற்றங்கள் ஒரு சில மாதங்களுக்கு மட்டுமே நீடிக்கக்கூடும். தடுப்பூசி போட்டுக்கொள்வது எவர் ஒருவரையும் மலடாக மாற்றக்கூடும் என்பதற்கோ அல்லது உங்களுடைய கர்ப்பமடையும் வாய்ப்புகளைக் குறைக்கக்கூடும் என்பதற்கோ எந்த ஆதாரமும் இல்லை.

## വാക്സിൻ എന്റെ ആർത്തവ ചക്രങ്ങളെയോ കുഞ്ഞിന് ജന്മം നൽകാനുള്ള കഴിവിനെയോ ബാധിക്കുമോ?

കോവിഡ്-19 വാക്സിനുകൾ ആർത്തവ കാലയളവുകൾക്ക് ഇടയിലുള്ള സമയം ഒന്നോ രണ്ടോ ദിവസം കൂട്ടുകയും രക്തസ്രാവത്തിന്റെ പാറ്റേൺ ചെറുതായി മാറ്റുകയും ചെയ്യാം. എന്നിരുന്നാലും, ഈ മാറ്റങ്ങൾ വാക്സിനേഷനെ തുടർന്നുള്ള ഏതാനും മാസങ്ങൾ മാത്രമേ ഉണ്ടായിരിക്കുകയുള്ളൂ. വാക്സിൻ വന്ധ്യതയ്ക്ക് ഇടയാക്കുമെന്നതിനോ ഗർഭിണിയാകാനുള്ള നിങ്ങളുടെ സാധ്യത കുറയ്ക്കുമെന്നതിനോ യാതൊരു തെളിവുമില്ല.

McMaster University | Obstetrics & Gynecology

health nexus santé

*Financial contribution from*
*Avec le financement de*

Public Health Agency of Canada | Agence de la santé publique du Canada